பெறுநர் தேதி: 23.10.2013

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,
மாநில மாற்றுத் திறனாளிகள் ஆணையரகம்,
சென்னை

ஐயா,

பொருள்: பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் மற்றும் நலன் கருதி செயல்படுத்த வேண்டிய ஆலோசனைகள் தெரிவித்தல் தொடர்பாக.

நேத்ரோதையா நிறுவனம், கிராமப்புறங்களில் இருந்து கல்விப் பயில்வதற்காக வரும் பார்வையற்ற மற்றும் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு இலவசமாக உணவு மற்றும் இருப்பிட வசதி செய்து தடையில்லாமல் அவர்களது கல்வி தொடர வழி வகை செய்து வருகிறது.

தமிழக அரசு 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையற்றோருக்கு தேசிய அடையாள அட்டை வழங்கியுள்ளது. இந்நிலையில் சுமார் 6 ஆயிரம் பேருக்கு மட்டுமே ஒளிரும் மடக்கு குச்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. எஞ்சிய பார்வையற்றோருக்கும் ஒளிரும் மடக்கு குச்சிகள் கிடைக்க வழி வகை செய்ய வேண்டும்.

பார்வை மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட நவீன கல்வி உபகரணம் (Angel Reader/Recorder) மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இதனை பார்வை மாற்றுத்திறனாளி மாணவர்கள் பயன்படுத்துகின்றனர். ஏழ்மை நிலையின் காரணமாக பெரும்பாலான கிராமப்புறங்களைச் சார்ந்த பார்வை மாற்றுத்திறனாளி மாணவர்களால் வாங்கி பயன்படுத்த இயவில்லை. எனவே அரசு கல்வி உதவி

47/1, Nolambur Phase II,Mogappair West, Chennai-600037,
Tamil Nadu, India. Phone :+ 91 44 26565012/26563680
Mobile :+ 91 93828 96636 E mail :nethrodaya@gmail.com Website :www.nethrodaya.org
DONATIONS ARE EXEMPTED FROM INCOME TAX UNDER SECTION 80G OF THE I.T. ACT, 1961

உபகரணங்களில் ஒன்றாக இதையும் சேர்த்து இலவசமாக வழங்க வழி வகை செய்ய வேண்டும்.

தற்போது மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித் தொகை நேரடியாக பயனாளிகளின் வங்கிக்கணக்கில் செலுத்தப்படுகிறது. அதைப்போலவே பார்வை மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு வழங்கும் கல்வித் உதவி தொகையும் மாணவர்களின் நேரடி வங்கிக் கணக்கில் செலுத்த வழி வகை செய்ய வேண்டும்.

மாற்றுத் திறனாளி துறை, மாநில மாற்றுத் திறனாளிகள் ஆணையரகம், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் ஆகிய அலுவலகங்களில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வழி வகை செய்ய வேண்டும்.

மாற்றுத் திறனாளிகளின் நலதிற்காக அமுல்படுத்தப்படும் திட்டங்களுக்கு, செயல்பாட்டு நெறிமுறைகள் வகுக்கப்படவேண்டும். இந்நெறிமுறைகள் அதிகாரிகளுக்கும், பயனாளிகளுக்கும் எளிதில் கிடைக்க வழி வகை செய்ய வேண்டும்.

நன்றி

இப்படிக்கு

தங்கள் உண்மையுள்ள

C.கோவிந்தகிருஷ்ணன்
நிறுவனர்

47/1, Nolambur Phase II,Mogappair West, Chennai-600037,
Tamil Nadu, India. Phone :+ 91 44 26565012/26563680
Mobile :+ 91 93828 96636 E mail :nethrodaya@gmail.com Website :www.nethrodaya.org
DONATIONS ARE EXEMPTED FROM INCOME TAX UNDER SECTION 80G OF THE I.T. ACT, 1961